# COVID-19: பாடசாலைகள் மற்றும் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களை மீளத் திறத்தல்

ஒன்ராறியோவின் பாடசாலைகளை மீண்டும் பாதுகாப்பாகத் திறப்பது அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும். அதனால்தான், எங்களின் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான விரிவானதொரு திட்டத்தை உருவாக்குவதற்காக மருத்துவர்கள், சுகாதார அதிகாரிகள், பாடசாலைச் சபைகள் மற்றும் கல்விபுகட்டுவோர்களுடன் ஒன்ராறியோ அரசாங்கம் இணைந்து செயற்படுகிறது.

மேம்பட்ட சுத்திகரித்தல், பாடசாலைகளில் அதிகமானளவில் ஆசிரியர்கள், பாதுகாவலர்கள் மற்றும் செவிலியர்களை வேலைக்கமர்த்தல், முகக் கவசங்கள் அணிதல், கை கழுவுதல், உடல்ரீதியான தூரத்தைப் பேணல், மற்றும் மாணவர்களினதும் பாடசாலைப் பணியாளர்களினதும் நல்வாழ்வை உறுதிசெய்வதற்கான பிறநடவடிக்கைகள்ஆகியவை அரசாங்கத்தின் திட்டத்தில் அடங்குகின்றன.

## புதியதொரு தெரிவு: வகுப்பில் அல்லது தொலைநிலைக் கற்றல்

திட்டத்தின் ஒரு பகுதியாக, 2020-2021 பாடசாலை ஆண்டுக்குரிய ஆரம்பநிலை மற்றும் இடைநிலை மாணவர்களுக்கு வகுப்பில் கற்றல் மற்றும் தொலைநிலைக் கற்றல் ஆகிய தெரிவுகள் கிடைக்கின்றன. அவர்களுக்கு எது சிறந்தது என்பதைக் குடும்பத்தவர்கள் தெரிவு செய்யமுடியும்.

## பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள்

மேலதிக சுத்தம்செய்தல், பிள்ளைகள் மற்றும் பணியாளர்களைப் பரிசோதித்தல், ஒரு பணியாளர் அல்லது பிள்ளை நோய்வாய்ப்பட்டால் தொடர்புத் தடமறிதலுக்கான வருகைப் பதிவுகளை வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளை நிறுவுதல் போன்ற மேலதிகமான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் செப்டம்பர் 1, 2020, முதல் முழுமையாகத் திறப்பதற்கு அனுமதிக்கப்படும்.

**COVID-19** பரவலுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட நியமமான பணியாளர்கள், பிள்ளை விகிதங்கள் மற்றும் அதிகபட்சம் ஒரு குழுவில் இருக்கக்கூடியவர்களின் அளவு போன்றவற்றுடன் பாடசாலைக்கு முன்பும் பின்புமான திட்டங்கள் செயல்படுவதற்கு அனுமதிக்கப்படும்.

மேலும் அறியுங்கள்: **ontario.ca/ReopeningChildCare**

## ஆரம்பநிலைப் பாடசாலைகள்: பாலர்வகுப்பு முதல் 8 ம் வகுப்பு

பாலர்வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான ஆரம்பநிலை மாணவர்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் பாடசாலைக்குச் செல்லமுடியும். இடைவேளை மற்றும் மதிய உணவு உள்ளடங்கலாக முழுநாளும் ஒரு குழுவாக அவர்கள் தொடர்ந்திருப்பார்கள். வகுப்புக் குழுக்கள் நாள் முழுவதும் ஒன்றாக இருப்பார்கள்.

## இரண்டாம்நிலைப் பாடசாலைகள்: 9 முதல் 12 ம் வகுப்பு

பாடசாலைச் சபையைப் பொறுத்து, வழக்கமான அல்லது இசைவாக்கப்பட்ட நேரில் கற்பித்தல் மற்றும் அறிவுறுத்தலுடன் இரண்டாம்நிலைப்

பாடசாலைகள் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமாகும் ontario.ca/DesignatedSchools)

வகுப்பு 9 முதல் 12 ஆம் வரையிலான பெரும்பாலான இரண்டாம்நிலை மாணவர்கள் இசைவாக்கப்பட்ட மாதிரி ஒன்றில் பாடசாலையை ஆரம்பிப்பார்கள். மாணவர்களிடையேயான தொடர்புகளை மட்டுப்படுத்துவதற்காக, முடிந்தவரையில் மாணவர்களைக் குழுக்களாக்குவதை வலியுறுத்துவதற்கென வடிவமைக்கப்பட்ட நேரசூசிகளைள் மாணவர்களுக்கு இருக்கும்.

### ஒதுக்கப்பட்ட பாடசாலைச் சபைகள்

குறைந்தது 50 சதவீதமான அறிவுறுத்தல் நாட்களுக்கான நேரில் வருகையை உள்ளடங்கும் மாற்று நேரங்களில் கலந்துகொள்ளும், ஏறக்குறைய 15 மாணவர்களைக் கொண்ட வகுப்புரீதியான குழுக்களுடன் ஒதுக்கப்பட்ட பாடசாலைச் சபைகளிலுள்ள இரண்டாம்நிலைப் பாடசாலைகள் இசைவாக்கப்பட்ட மாதிரியுடன் ஆரம்பமாகும்.

இசைவாக்கப்பட்ட மாதிரியைக் கொண்ட இரண்டாம்நிலைப் பாடசாலை மாணவர்களுக்கு தொலைநிலைக் கற்றல் நாட்களில் பாடத்திட்டத்துடன் தொடர்பான சுயாதீனமான பணிகள் வழங்கப்படும், அத்துடன், முடிந்தபோது, ஒவ்வொரு பாடசாலை நாளினதும் ஒரு பகுதி நேரத்தில் அவர்களின் ஆசிரியர் மற்றும் வகுப்பு தோழர்களுடன் அவர்கள் வழமையான இணையக் கற்றலில் பங்கேற்பார்கள்.

### ஒதுக்கப்படாத பாடசாலைச் சபைகள்

ஒதுக்கப்படாத பாடசாலைச் சபைகளில் உள்ள இரண்டாம்நிலைப் பாடசாலைகள்வாரத்தில் ஐந்து நாட்கள் திறப்பதற்கு அனுமதிக்கப்படும். பாடசாலைச் சபைகள் ஒதுக்கப்படல், பாடசாலைச் சபையின் அளவு, சபையிலுள்ள இரண்டாம்நிலைப் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அளவு, வகுப்புரீதியான குழுக்களின் அளவு மற்றும் சபை பிரதானமாக நகர்ப்புறத்தில் உள்ளதா போன்ற கருத்தில்கொள்ளப்படும் பல காரணிகளில் அடிப்படையிலானதாக இருக்கும்.

### பாதுகாப்பு உத்திகள்

செப்ரெம்பரில் பாடசாலைகளுக்குப் பாதுகாப்பாக திரும்புவதை உறுதிப்படுத்துவதற்கு உதவிசெய்வதற்காகப் பின்வரும் பாதுகாப்பு உத்திகள் அமுலாக்கப்படவுள்ளன:

- பாடசாலைக்குச் சமூகமளிப்பதற்கு முன்பாக, அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களும் தினமும் சுயபரிசோதனை செய்யவேண்டும்
- பாடசாலையின் உள்ளே, சுயபரிசோதனை, கைச் சுகாதாரம், உடல்ரீதியான தூரம், ஒரு வழிப் பாதை விறாந்தைகள், நுழைவு நடைமுறைகளில் மாற்றங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் பயன்பாடு ஆகியவற்றை வலுப்படுத்தும் சுவரொட்டிகள் மற்றும் சைகைகள்
- வகுப்பு 4 முதல் 12 வரையிலான மாணவர்கள் மருத்துவப் பாவனைக்குப் பயன்படுத்தப்படாத அல்லது துணியாலான முகக் கவசங்களை பாடசாலைக்குள் அணியவேண்டும். 3 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு முகக் கவசங்கள் கட்டாயமில்லை, இருந்தாலும் ஊக்குவிக்கப்படுகிறது.
- அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும், அத்துடன் பாடசாலை சார்ந்த அனைத்துப் பணியாளர்களும் முகக் கவசங்களை அணியவேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

பரிசோதிப்பதில் உதவவும், உள்ளூர் சுகாதார நெறிமுறைகளை செயல்படுத்தவும், பிள்ளைகள் மற்றும் பணியாளர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் உதவும் சுமார் 500 புதிய பொதுச் சுகாதாரச் செவிலியர்கள் பாடசாலைகள் மற்றும் சபைகளுக்கு ஆதரவு வழங்குவார்கள்.

பிள்ளைகள் மற்றும் பணியாளர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக, கிடைக்கக்கூடிய சமூக வெளிகளை அணுகல், அதிகளவிலான ஆசிரியர்களை வேலைக்கமர்த்தல், அல்லது நேரசூசிகை அற்ற ஆசிரியர்கள் அனைவரையும் முழுமையாகப் பயன்படுத்தல் போன்ற விடயங்கள் சபைகள் செய்வதைச் சாத்தியமாக்கும் மேலதிக நடவடிக்கைகளையும் ஒன்ராறியோ அரசாங்கம் எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கைகள், குறைந்தளவான மாணவர்களைக் கொண்ட வகுப்புக்களை வழங்கவும், வகுப்பறைகளில் உடல்ரீதியான தூரத்தை அதிகரிப்பதற்கு வசதிசெய்யவும், அந்த அந்தப் பாடசாலையின் தேவைகளின் அடிப்படையில் மாற்றங்களைச் செய்யவும் பாடசாலைச் சபைகளை அனுமதிக்கும்.

பாடசாலைகளில் காற்றோட்டம், காற்றின் தரம் மற்றும் HVAC (வெப்பமூட்டும் காற்றோட்டம் மற்றும் Air Conditioning) அமைப்புச் செயல்திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கான நிதியுதவியையும் அரசு பாடசாலைச் சபைகளுக்கு வழங்குகிறது.

### COVID-19 நோய்க்குறிகளைக் கண்காணித்தல் மற்றும் எதிர்வினையாற்றல்

யாரவது மாணவர் அல்லது பணியாளருக்கு பாடசாலையில் இருக்கும்போது COVID-19 நோய்க்குறிகள் உருவானால்அவர் உடனடியாக மற்றவர்களிடமிருந்து பிரிக்கப்பட வேண்டும், அத்துடன் முடியுமாயின் அவர் வீட்டிற்குச் செல்லும்வரை தனி அறை ஒன்றில் தனிமைப்படுத்தப்படவேண்டும். தனிமைப்படுத்தப்பட்ட மாணவர்களின் உடல்ரீதியான தூரத்தைப் பேணுவதுடன், சுகாதார வழிகாட்டுதல்களுக்கேற்பPPEவழங்கப்பட்டு, வழக்கமான பாடசாலை விதிமுறைக்கேற்ப மேற்பார்வையிடப்பட வேண்டும். நோய்க்குறிகள் உள்ள மாணவர் அல்லது பணியாளர் எவரும் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தக்கூடாது.

பரிசோதனையில் நேர்மறையாக இருப்பவர்கள் 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தல் செய்யவேண்டும், அத்துடன் பொதுச் சுகாதாரத்தினர் அறிவுறுத்தும்வரை அவர்கள் பாடசாலைக்குத் திரும்ப முடியாது.

நீங்கள் நோய்க்குறிகள் உள்ள ஒரு பெற்றோர், பாதுகாவலர் அல்லது பாடசாலைப் பணியாளராக இருந்தால், என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு [covid-19.ontario.ca/self-assessment](https://covid-19.ontario.ca/self-assessment) இல் இணையச் சுய மதிப்பீடு ஒன்றைப் பூர்த்திசெய்யுங்கள்.

### COVID-19 நோய்க்குறிகளை அறிவித்தல்

பாடசாலைக்குள் இருக்கும் சந்தேகத்திற்கிடமான அல்லது உறுதிப்படுத்தப்பட்ட COVID-19 நோய்க்குறிகளை உடனடியாக உள்ளூர் பொதுச் சுகாதார பிரிவுக்கு பாடசாலைகள் தெரிவிக்க வேண்டும். அதிபர்கள் ஒரு பிரத்தியேகமான பொதுச் சுகாதார தொடர்பு இலக்கத்தையும் அருகில் இருக்கும் COVID-19 மதிப்பீட்டு மையங்களின் பட்டியலையும் வைத்திருக்க வேண்டும்.